# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள்</u> **<u>12.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண்கள். SA 16037 & 20133/SCIC/2023</u>

திரு சி. காசிராஜன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

பொதுத் தகவல் அலுவலர்/ --- பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளத்தூர் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

## <u>ஆணை</u>

**<u>SA 16037/SCIC/2023</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 11.06.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், புதுகோட்டை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலூகா மாத்தூர் கிராமம் ரீசெட்டில்மெண்ட் கணக்கின்படி, புலஎண்.272/4

விஸ்தீரணம் 0.73.0, சர்வே எண்.283 விஸ்தீரணம் 3.32.5 சர்வே எண்.284 விஸ்தீரணம் 7.75.0 சர்வே எண். 287 விஸ்தீரணம் 2.15.0 ஹெக்டேர் நிலங்களானது புறம்போக்கு நிலம் & அனாதீனமா / இல்லையா என்பதற்கான தகவல்கள், 24.03.2023 தேதியிட்ட புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பது போன்ற விவரங்களை 6 இனங்களில் தகவல்களாக வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவில் கோரிய இனம் 1க்கான தகவல்களை வழங்கும்பொருட்டு மனுதாரரின் மனுவானது குளத்தூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு 14.08.2023 தேதியிட்டு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மனுதாரர் 14.07.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். இனம் 1ஐத் தவிர்த்து மற்ற இனங்களுக்கு 16.08.2023 தேதியிட்ட கடிதத்தின் வயிலாக புதுக்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 07.09.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 16037/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 14.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 21.11.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

**SA 20133/SCIC/2023**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 24.06.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், புதுகோட்டை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலூகா மாத்தூர் கிராமம் ரீசெட்டில்மெண்ட் கணக்கின்படி, புலஎண்.213/4 விஸ்தீரணம் 0.41.50 ஹெக்டேர் நிலமானது புறம்போக்கு நிலம் & அனாதீனமா / இல்லையா என்பதன் தகவல்கள், 07.05.2023 தேதியிட்ட புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பது தொடர்பாக 6 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவில் கோரிய இனம் 1க்கான தகவல்களை வழங்கும்பொருட்டு மனுதாரரின் மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 21.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக குளத்தூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனம் 1ஐத் தவிர்த்து மற்ற இனங்களுக்கு 21.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வயிலாக புதுக்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 06.09.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 12.09.2023 தேதியிட்ட கடித்தின் வாயிலாக மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 18.11.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 20133/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தன்பேரில், 14.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 11.11.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

இவ்விரு இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுக்களின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 12.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

இன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி கு, சுசீலா, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், புதுக்கோட்டை மற்றும் திருமதி பா. உமாமகேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழக்குகளும் ஒத்த பொருள் தொடர்புடையது என்பதாலும், ஒரே மனுதாரர் மற்றும் ஒரே பொது அதிகார அமைப்பு தொடர்புடையது என்பதாலும் இவ்விரு வழக்குகளும் இன்று ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆணையத்தால் கீழ்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது.

- மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான 11.06.2023 மற்றும் 24.06.2023 ஆகிய தேதிகளிட்ட மனுக்கள் முறையே சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 14.08.2023 மற்றும் 21.07.2023 ஆகிய தேதிகளிட்டு வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு

மாத காலத்திற்கு மேல் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இக்காலதாமத்திற்கு பொறுப்பான **அப்போது பொறுப்பிலிருந்த முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு ச. அஞ்சனக்குமார், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), புதுக்கோட்டை அவர்கள் 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

- மேலும் 03.08.2023 தேதியிட்டு குளத்தூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தகவல்கள் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முறையற்ற மற்றும் தவறான பதில் என்பதை ஆணையம் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சுட்டிக்காட்டுகிறது.

- **எனவே, 03.08.2023 தேதியிட்டு மனுதாரருக்கு தவறான தகவல்கள் வழங்கிய காரணத்திற்காக அப்போது பொறுப்பிலிருந்த குளத்தூர் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு செந்தில் குமார், தற்போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கரம்பக்குடி என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர், குளத்தூர் அவர்கள் 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மற்ற இனங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்றுக்கொள்கிறது.**

- **அதனைத்தொடர்ந்து, மனுதாரரின் மனுவில் கோரிய இனம் 1 குறித்து பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளத்தூர், சரியான தகவல் / ஆவணங்களை 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

- **மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவுகளுடன், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 16037 & 20133/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
புதுக்கோட்டை

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளத்தூர் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு ச. அஞ்சனக்குமார்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

திரு இரா. செந்தில்குமார்,
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கரம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் (**(முன்னாள் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.**

**<u>மனுதாரர்</u>:-**
திரு சி. காசிராஜன்,
த/பெ (லேட்) சின்னத்தம்பி,
க.எண்.604-1, சிதம்பரம் நகர்,
மாத்தூர் கிராமம், குளத்தூர் தாலூகா,
புதுக்கோட்டை மாவட்டம் 62 515

**நகல்**

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   புதுக்கோட்டை.

2. பதிவுத்துறைத்தலைவர்,
   பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
   எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
   சென்னை 600 028.

Copy to: File TK/PS